செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

மௌனமாகக்கிழமைதோறும் வெளிவருவது.

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு.

பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதிஸு (1889) ஆவணி மீ 28 உ. அச்சகம்: சைவப்பிரகாசயந்திரசாலை, 450 காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்-அசு] யாழ்ப்பாணம்: விரோதிகிருது ஸு மாசி மீ கஉ உ வெள்ளிக்கிழமை (25 2-1972) [இலஃசசு

# திருவள்ளுவ நாயனர் உபதேசம் எங்கும்பரவுவதாக



திருவள்ளுவநாயனர் குருபூசையைச் சைவ பரிபாலன சபையார் 1-3-72 புதன்கிழமை மாசி உத்தரத்தன்று நடத்துகின்றார்கள். திருவள்ளுவருடைய ஞானோபதேசத்தை மக்கள் அறிந்து தம் வாழ்க்கையைச் சீராக நடத்துவதற்கு அவருடைய குருபூசையை நடத்துதல் உறுதுணை புரியும்.

மக்களுடைய இன்னல்களுக்கு திருக்குறள் உபதேசம் இன்றியமையாத சஞ்சீவியாகும்.

**கவுணியனர்**

சிந்தைக் கினிய செவிக்கினிய வாய்க்கினிய
வந்த விருவினைக்கு மாமருந்து — முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனர்
பன்னிய வின்குறள் வெண்பா.

(வளர்ச்சி 2- ஆம் பக்கம்)

உ
திருச்சிற்றம்பலம்

மூலநோய் தீர்க்கு முதல்வன்
கண்டாய்
முத்தமிழு நான்மறையு
மானன் கண்டாய்
ஆலின்கீழ் நால்வர்க்
கறத்தான் கண்டாய்
யாதியு மந்தமு மானன்
கண்டாய்
பால விருத்தனு மானன்
கண்டாய்
பவளத் தடவரையே
போல்வான் கண்டாய்
மாலைசேர் கொன்றை
மலர்தான் கண்டாய்
மறைக்காட் டுறையு
மணாளன் றனே.

திருச்சிற்றம்பலம்

-திருநாவுக்கரசுசுவாமிகள்.

## சிதம்பரத்தில் 100 வில்வமர கன்றுகள் நாட்டப்பட்டன.

'சிவநெறிச் செல்வர்'' உயர் திரு. வாகீசம்பிள்ளை அவர்கள் கருக்கோயிலின் ஆயிரக்கால் மண்டபம் சுற்றி சுமார் 100 வில்வ கன்றுகள் வைத்து பெரும் மரங்களாக வளர்ந்து அந்த மரங்களிலிருந்து வில்வப்பத்ரம் களெடுத்து கார்த்திகைத் திங்கள் 1 ஆவது சோமவாரத்தன்று ஸ்ரீ சிவகாமசுந்தரி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு லக்ஷார்ச்சனையையும் நடத்தி வைத்துள்ளார். (ந. கி.)

## திருஞான சம்பந்தர் திருவாலவாயையடைதல்

சைவப்புலவர் திரு. க. சிற்றம்பலம், கோட்டடி

(முன் வளர்ச்சி — 2)

அவனருளாலே அவன் தாள்வணங்க அவனியிலுள்ளோர் அதிசயிக்க அருள் கொண்டு, ஆடியபாதனால் அளிக்கப்பட்ட, அழகிய மணிகளால் அணிசெய்யப்பட்ட, முத்துப்பல்லக்கில், இருளகற்றும் பூரண வெண்மதிபோல, அவனியெல்லாம் அஞ்ஞான இருள் அகற்றும் ஞானத்தின் திருவுரு வீற்றிருந்து அடியார் புடைசூழ வரும் காட்சியைக் கண்ட குலச்சிறையார், மெய்சிலிர்த்து, பண்டை வினையின் பயனிதுவோ என பார் மிசை வீழ்ந்து வணங்கினர். அடியற்ற மரம்போல அவனியில் விழுந்து பணியும் அன்பரை ஞான வள்ளல் சிவிகையிலிருந்து இறங்கி சிவனடிக்கன்புள்ள மந்திரியாரைத் தனது சிவஞானப் பால்பெற்ற கையால பற்றி எழுந்திருக்க வேண்டினர். அமைச்சரும் அருப்பேறு பெற்றவர்போல் எழுந்து வணங்கி சிந்தைமலர சிவசோதியைக் கண்டு களித்தார்.

ஞானசம்பந்தர் மந்திரியாரைப் பார்த்து மன்னுயிரைத் தன்னுயிர் போல் காக்கும் அறக் குலத்தின் தனிமுதலாம் மங்கையர்க்கரசியின் அன்பமகலவும், வாழ்வு மலரவும், திருவருள் பெருக என்று வாழ்த்தி நடந்த செயல்களை நன்குணர்ந்து எம்பெருமான திருவாலவாய் எங்குள்ளது என்று விண்ணவரும், மண்ணவரும் துதித்து மேன்மைகொள்ளும் வண்ணம் கோபுரத்தைக்கண்டு இரு கரங்களையும் உச்சி

வளர்ச்சி 4-ஆம் பக்கம்

## திருக்குறள் THE GREAT KURAL

பாயிரவியல் Introduction

[யாழ்ப்பாணத்து, நல்லூர் சிவபக்தமாமணி திரு ச சூரசங்கரன் LLB (Lond) நியாயதுரந்தரர், அவர்கள் எழுதியுள்ள 'திருக்குறள உரைத்தொகை' என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது.
—ஆசிரியர்]

அதிகாரம் I கடவுள் வாழ்த்து

(குறள் 10) (முற்றொடர்—9)

பிறவிப் பெருங்கட லீந்துவர் நீந்தா
ரிறைவ னடி *சேரா தார்

இறைவனுடைய திருவடிகளைச் சேர்ந்தார் பிறவி என்ற பெரிய கடலை நீந்திக் கரையேறுவர். அவற்றைச் சேராதார் அங்ஙனம் கரையேற முடியாமல் அதனுள் அழுந்துவர்.

They alone swim and cross the vast sea of births and deaths who take refuge in the Feet of God. But those who do not so take refuge in the Feet of God cannot cross the sea of births and deaths and will suffer by being tossed about in it.

*சேராதவர் என்பது மனக்கடவர் பாடம் சேர்ந்தார் என்ற சொல் வருவித்து இறைவனடி சேர்ந்தார் பிறவிப் பெருங்கடல் நீந்துவர் எனக்கொண்டு உரை செய்யப்பட்டுள்ளது.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் என்பதற்கு மக்கள் எல்லாரும் பிறவி என்ற பெரிய சமுத்திரத்தில் நீந்தித் ததத்தளித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று உரை செய்வாரும் உள. பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் எனக் கொண்டு கூட்டி அதற்கு இப்பிறவியாகிய பெரிய கடலை எளிதில் கடக்க வல்லராய் இருக்கினும் கடவார் என்று உரை செய்பவரும் உளர். சேர்ந்தார் - எப்பொழுதும் நினைப்பவர். (வளரும்)

## சிதம்பர தலச் சுற்றுமதில் அமைப்புக்கு தருமையாதீன குருமகாசந்நிதானத்தின் பெரும் ஆதரவு

["இந்துசாதனம்" அபிமான விருபர் திரு. மா. பாலசுப்பிரமணியம்அவர்கள் சிதம்பரம், தென்னிந்தியா]

திருக்கயிலாய பரம்பரைத் தருமபுரம் ஆதீனம், 26 ஆவது பட்டம் குருமகா சந்நிதானம் ஸ்ரீ. ல. ஸ்ரீ சண்முக தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகளுக்கு, பிப்ரவரி 4 ஆம் நாள் மாலை ஸ்ரீநடராஜப் பெருமான் கோயிலில் நகர் மக்கள் பாராட்டு விழாவை (பட்டினப் பிரவேசத்துடன்) நடத்தினர்கள். ஸ்ரீ-ல-ஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் ஆசியுரை வழங்கு கையில் சிதம்பர தலங்களுள் எல்லாவற்றிலும் சிறப்பு மிக்க தலம், ஆலயத்தில் சுற்றுமதில் முதலான திருப்பணிகள் முற்றுப் பெறுவதற்கு அன்பர்கள் முயற்சி எடுத்துக் கொள்ளுதல் வேண்டும், ஒவ்வொருவரும தங்கள் ஜென்ம நட்சத்திரத்தில் நடராஜப் பெருமானுக்குக் காணிக்கையாகக் கொடுப்பது என்று உறுதி எடுத்துக் கொண்டால் மிக எளிதில் பெருந் தொகை திருப்பணிக்கு சேர்ந்து விடும் ஆதீனத்தின் சார்பாக 100

(வளர்ச்சி 4 - ஆம் பக்கம்)

## அன்புத் திருப்புகழ் (நீர்வேலி)

வீண்புலம்பு கோண் மிகுந்து சேர்வாரைக் குறியாதே
வீங்குடம்பு பாங்கிதென்று நேர்பேசித் திரியாதே
மாணபமைந்து தாண்முகந்து கூர்ஞானச் சுவைதேடி
வாங்குபண்புவாய்ந்ததொண்டுசார்வாழ்வைத்தருவாயே
ஊண பொலிந்து நான்பயின்றசூர்மானத தொடுவேலா
ஓங்குமன்பு தாங்கவந்து நீர்வாவிக் கணைவோனே
பூண்சிலம்பு சேண்சிலம்பு சீர்வீரக் குமரேசா
பூங்கடம்பு தேங்குகின்ற நீர்வேலிப் பெருமாளே.

—அளவையூர் "அருட்கவி" சீ. வி.

# சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம் வீழ்கதண்புனல் வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல் லாம ரனாமமே சூழ்க வையகமுந் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

விரோதிகிருது ஹு மாசி மீ கஙு-உ வெள்ளிக்கிழமை [1972]

# அநுட்டானம்

சென்ற 17-2-72 வெள்ளிக்கிழமை காஞ்சிபுரம் தொண்டை மண்டல மெய்கண்டாராதீன குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாச்சாரியசுவாமிகளுக்கு அவரிடம் சிவஞான போதபாடங் கேட்ட மாணவர்கள் யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை நாவலராச்சிரம மண்டபத்தில் சிறப்பானவொரு பாராட்டுவிழாவை நடத்தினார்கள். சிவஞான போதத்தின் உண்மைகளை உணர்தற்குத் தனிக் கல்வியறிவு மாத்திரம் போதாது சிவபெருமானை முறைப்படி வழிபட்டுத் தியானஞ் செய்கின்ற கிரியையும் மாணவர்களுக்கு அவசியந் தேவையெனவும் அப்படியான கிரியையைப் புரிகின்றவர்களுக்குச் சிவபெருமான் சிவஞான போதவுண்மைகளை உள்நின்றுணர்த்துவாரெனவும் சுவாமிகள் குறிப்பிட்டார்கள். அத்தகைய வழிபாட்டுக்கு அநுட்டானம் அவசியம். அநுட்டானம் எனபது தியானம் அல்லது விதிக்கப்பட்ட கிரியைகளைச் செய்தல் என்பது பொருள். சைவ மக்களுட் சிலர் சமய தீட்சை பெற்றுவிட்டுச் சந்தியா வந்தனத்தைத் தொடர்ந்து செய்வதில்லை. எங்ஙனமாயினும் சமயதீட்சை செய்து வைக்கும்பொழுது பலர் போலி ஆர்வததுடன் சமய தீட்சையைப் பெற்றுவிட்டுப் பின் சந்தியாவந்தனஞ் செய்வதில்லை. அவர்களுக்குச் சமய தீட்சையின் மகிமை விளங்குவதில்லை. சமய குருமாரும் தங்களிடம் சமய தீட்சை பெறுபவர்களைக் கிரமமாகச் சந்தியாவந்தனம் புரியத் தூண்டுவதில்லை. சைவ சமய ஒழுக்கம் குன்றி வருவதற்கு இது ஒரு முக்கிய காரணமாகும்.

அநுட்டானம் மனிதனைச் சிவமாந் தன்மையடையப் பெருந்துணையாகவுள்ளது அவனுடைய மனம் தூய்மை பெற அநுட்டானம் சிறந்த சாதனமாகும். மனம நினைக்கும் கருவி, 'மங்' என்ற தாதுவிலிருந்து மனம் என்ற சொல் பிறந்தது. மனம் என்ற சொல்லிலிருந்து மனிதன என்ற பதம் உண்டானது. நினைக்கும் தகுதியையுடையவன் மனிதன். மனத்திலுள்ள அழுக்கை அறுப்பதற்கு அநுட்டானம் பெருந்துணையாகும். அழுக்காறு அவா வெகுளியாகிய மாசுகள் நீங்கினால் மனிதன் தூயவன் ஆகின்றான். மன மாசுகளை நீக்கி மனிதனை தெய்வத் தன்மை பெறவே ஞானிகள் சமய அநுட்டான விதிகளை ஆக்கி வைத்தார்கள்.

பாசங்களை நீக்குதற்கு ஸ்ரீ பஞ்சாட்சரத்தை முறைப்படி ஓதுதல்வேண்டும், திருவைந்தெழுத்து சிவாயநம என்ற மந்திரம். இது சூக்குமபஞ்சாட்சரம் ஸ்ரீ பஞ்சாட்சரத்தை நமசிவாயவென்றும் ஓதுவார்கள், இது தூல பஞ்சாட்சரம். "காதலாகிக் கசிந்து கண்ணீர்மல்கி ஓதுவார்தமை நன்னெறிக்குய்ப்பது நாதன்நாம நமச்சிவாயவே" என்று திருஞானசம்பந்த மூர்த்திநாயனார் கூறியுள்ளார். இம்மந்திரத்தை பக்தியுடன் ஓதுகின்றவர்கள் மோட்சத்தையடைவார்கள். பற்றுக்களை அறுத்தும் பாசங்களை நீக்குதற்கும் நேசமுடன் திருவைந்தெழுத்தையோதுதல் வேணடும். பட்டினத்தடிகள் தாமிறக்கும்பொழுது "ஐந்தெழுத்தோதவும கற்பியுமே" எனச சிவபெருமானிடம் விண்ணப்பிக்கின்றனர். மனத்தழுக்கைத் தவிர்க்க திருமுறைகளை நாடோறும் ஓததல வேண்டும் திருமுறைகளைப் பொருளுணர்ந்து இசையுடன் பாராயணஞ் செய்தலும் மனமாசுகளை அகற்றப் பெருந்துணையாகும்.

'ஆசையறாய் பாசம் விடாய் ஆனசிவ பூசைபண்ணாய்
நேசமுடன் ஐந்தெழுத்தை நீ நினையாய்—சீசி
சினமே தவிராய் திருமுறைகள் ஓதாய்
மனமே! உனக்கென்ன மாண்பு'?

எனத் தருமையாதீனத்தின் முதல் குரவரான குருஞானசம்பந்தர் உலகுக்கு நல்லுபதேசஞ் செய்திருக்கின்றார்.

மனமே! மேலான சிவபூசையைப் பண்ணுவாயாக. அதனால் உன் ஆசையையறுப்பாய், அன்போடு ஐந்தெழுத்தை நினைப்பாயாக, திருமுறைகளை ஓதுவாயாக. இவற்றினால் பாசத்தையும், சினத்தையும், ஆசையையும் தவிர்த்து வீட்டுநெறியையெய்தலாம்.

உ

## வேம்படி வைகும் விநாயகர்

வேம்படி வைகும் விநாயகர் ஆலயம்
ஆம்படி இலங்க அரும்பணியைத் — தாம்படைத்த
தர்மகர்த்தர் அந்தணர்கள் தம்பிரான்சு வாமிகள்
சர்வ தொண்டே சைவநற் சீர்.

— "இறை ஒளி".

## திருவள்ளுவ நாயனார் உபதேசம்

(1- ஆம் பக்கத்தின் வளர்ச்சி)

முற்பட்டதாகிய நல்லவழியை நாமறியும் பொருட்டு நாவால் விளங்குகின்ற புலமையையுடைய திருவள்ளுவ நாயனாரால் சொல்லப்பட்ட இனிய குறள் வெண்பாக்கள் நினைத்தால் மனத்திற்கு இன்பஞ் செய்வன. கேட்டாற் காதிற்கு இன்பஞ் செய்வன தொடர்ந்து வருகின்ற இருவினை நோய்களுக்குப் பெரிய மருந்துகளாவன.

வேண்டுதல் வேண்டாமையிலானடி சேர்ந்தார்க்
கியாண்டு மிடும்பை யில.

ஒரு பொருளை விழைதலும் வெறுக்தலுமில்லாதவனடியைச் சேர்ந்தார்க்கு எக்காலத்தும் பிறவித்துன்பங்கள் உளவாகா.

## லண்டன் மாநகரில் சிவராத்திரி விழா

லண்டனில் பிரித்தானிய சைவ மாமன்றத்தினரால் மகா சிவராத்திரி விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது மேற்படி விழா ஈழத்துப் பொறியியலாளர் திரு. இரத்தினசிங்கத்தின் உபயமாக நடாத்தப்பட்டது. வழமைபோலவே நிகழ்ச்சிகள் முதல் சாமப்பூசையுடன் ஆரம்பமாயின. பூசையின்பின் திருமதி வைரவழர்த்தி, இராமநாதர் ஆகியோரின் கூட்டுப்பிரார்த்தனையும் அதன்பின்னர் இன்னிசை விருந்தும் நடைபெற்றது. திருமதி ஜெயநாதன் — வயலினு, திரு. சுந்திரராஜன் — மிருதங்கமும் இசைக்க, திருமதி கணேசநாதன் பக்திப் பாடல்கள்பாடி பக்திப் பரவசத்தில் ஆழ்த்தினர் இதனைத் தொடர்ந்து நடைபெற்ற திருமதி கதிர்காமத்தம்பியின் வீணை இசை பக்தியூட்டுவதாயமைந்தது. இரண்டாம சாமப் பூசை நடைபெற்றபின் பண்டிதை திருமதி தம்பித்துரையின் பக்திப் பாடல்கள் இடம் பெற்றன. தூதாகங்களிலிருந்து பெறப்பட்ட கலைப் படங்கள் திரையிடப்பட்டன. பின்னர் மூன்றும் சாமப் பூசை நடைபெற்றது

"இந்து சமயம் தற்காலத்துடன் ஒத்துப் போகவில்லை இதுசரியா?" என்ற தலைப்பில் ஒரு கருத்தரங்கை விநதாகர் திரு. ஞானசேகரன் ஆரம்பித்து நடாத்தினர்.

லண்டன் வாழ் இந்துக்களின் அறிவின் ஆழத்தையும், விரிவையும் காட்டும் அளவிற்குக் கருத்தரங்கு திகழ்ந்தது. தொடர்ந்து நாலாவது சாமப்பூசை இடம் பெற்றது. அதிகாலையில் வந்திருந்தோர் அனைவருக்கும் பாறனை விருந்தளிக்கப்பட்டது நான்கு சாமப் பூசைகளிலும் திரு வேதநாராயண ஐயரும், திரு. ஜகதீசுவரம்பிள்ளையும் திருமுறை அர்ச்சனைப் பாக்களைச் செபிக்கத் திரு சிவகுருநாதபிள்ளையின் உதவியுடன் மன்றத் தலைவர் திரு. சபாபதிப்பிள்ளை பூசை ஆராதனைகளைச் செய்தார். பிரித்தானிய சைவ மாமன்றத்தினரின் சைவசமயத் தொண்டு பிரித்தானியாவில் வாழும் சைவ மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக ஏற்பட்டுள்ளது. காரிருள் காலத்தையும் கவனியாது 75 க்கு மேற்பட்டோர் வந்து இரவு முழுவதும் உபவாசமிருந்தது இதற்கு ஒரு எடுத்துக்காட்டாகும்.

(லண்டன் முரசு விசேட நிருபர்).

## சமயப்போட்டிகள்

சித்தன்கேணி சிவச்செல்வி இந்துசமய மன்றத்தினர் யாழ். மாவட்ட ரீதியில் தேவாரம் திருக்குறள்; திருவருட்பயன் மனன எழுத்துப்போட்டி ஒன்றினை கடந்த 19ம் திகதி காலை 8-30 மணி தொடக்கம் 12 பரீட்சை நிலையங்களில் நடாத்தினர் மேற்படி போட்டிகளுக்கு யாழ் மாவட்டத்திலுள்ள பல ஊர்களிலிருந்து மொத்தம் 905 மாணவர்கள் பங்குபற்றினர். இப்போட்டிகளிற் கலந்து பரிசு பெறுவோர்க்குப் பதக்க பரிசில்களும், புத்தகப் பரிசில்களும் தராதரப் பத்திரங்களும் வழங்கப்படவிருக்கின்றன. இப்போட்டிகளில் மாணவிகள் மாத்திரம் 75 விகிதத்தினர் பங்குபற்றியிருப்பதாக மன்றச் செயலாளர் சைவப் புலவர் திரு நா. க. தங்கரத்தினம் ஆசிரியர் தெரிவித்துள்ளார். சித்தியெய்தியவர்களின் பெயர்கள் விரைவில் அறிவிக்கப்படும். இதற்கான பரிசில்கள் எதிர்வரும மார்ச் மாதம் வட்டுகக்கோட்டை இந்துக் கலூரியில் நடைபெறும் விழாவில் வழங்கப்படும்.

## எட்டாவது சைவ மகாநாடு

கைதடி இந்து வாலிபர் சங்கத்தின் எட்டாவது சைவமகாநாடு 18, 19, 20-2-72 ஆம் திகதிகளில் கைதடி, மூர்த்தியாவத்தை வீதியில் சிறப்பாக நடைபெற்றது. பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி, அறககாவலர் முதலியார் செ. முத்துத்தம்பி. சைவப் புலவர்மணி த. குமாரசுவாமிப்பிள்ளை, திரு. க. சச்சிதானந்தன் M. Sc. (அகில இலங்கைச் சைவ இளைஞர் பேரவை திரு வை. இரகுநாத முதலியார் M. Sc. (சைவபரிபாலன சபைக் காரியதரிசி), வித்துவான் க. கணபதிப்பிள்ளை B. A. உதவி அரசாங்க அதிபர் திரு தி முருகேசபிள்ளை, சைவபூஷணம் நம. சிவப்பிரகாசம் முதலியவர்கள் மகாநாட்டில் விரிவுரை நிகழ்த்தினார்கள். சைவமகாநாட்டில் மேற்படி கைதடி இந்து வாலிபர் சங்கம், சங்கத்தின் தொண்டுகளும், சைவசமய சம்பந்தமான கட்டுரைகளுமடங்கிய ஒரு சஞ்சிகையையும் வெளியிட்டுள்ளது. சங்கத்தின் தொண்டுகள் பாராட்டற்குரியன.

திருஞானசம்பந்தர் ........

3-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

தலை அல்லாது வேறு
ஒன்றும் அறியோம்;
ஆலவாய் அண்ணலே,,
என்ற மனம் கசிந்தார,

(வளரும்)

## அணிந்துரை அரங்கம்

## சுப்பிரமணிய பிரபாவம்

(இரண்டாம் பதிப்பு)

எழுதியவர்: பாரத்துவாசி
ஆ. சண்முகரத்தினையர்
சுன்னாகம்
பொன்னம்பலம் சரவணமுத்து
அவர்கள ஞாபகார்த்த
வெளியீடு.

இந்நூலுக்கு வைத்தீஸ்வர
வித்தியாலயத்தின் முன்னைநாள்
அதிபர்
திரு ச. அம்பிகைபாகன்
அவர்கள் வழங்கிய
முன்னுரையைக கீழே
தருகின்றோம்

சில வாரங்களுக்கு முன் சுப்பிரமணியப் பிரபாவம் என்னும நூல் பொன்னு வெளி இளைப்பாறிய உடையார் திரு. கு. அருளம்பலம் அவர்கள் மூலம் எனக்குக் கிடைத்தது. இந்நூல் அவர்களின் பாட்டனாரும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் மாணாக்கருள ஒருவருமான திரு வீ சின்னததம்பி அவர்களால் சேகரிதது வைக்கப்பட்ட நூல்களிலொன்றாகும்.

இந்நூல் அறுபதாண்டுகளுக்கு முன் பிரசுரிக்கப்பட்டது. இதன் ஆசிரியர் பாரத்துவாசி ஆ. சண்முகரத்தினையர் அவர்களைப்பற்றி முதற பதிப்பில் சில கூறப்பட்டுள்ளன இப்பொழுது அவர்களைப் பற்றி ஆராய்ந்த பொழுது பல புது விஷயங்கள் கிடைத்துள்ளன. அவர்கள் டச்சுக்காரர் காலததில் தேசாதிபதியாயிருந்த ஒருவருக்குப் பிரதம மந்திரியாக விருந்த கொச்சிக் கணேசையர் வழித்தோன்றலென்பர். அவர்கள் ஒரு அச்சுயந்திரசாலையைத்தாபித்து ஞானப்பிரகாசம என்னும சஞ்சிகையையும், திரிகோணாசலபுராணம முதலிய நூல்களையும் வெளியிட்டாரென அறியக்கிடக்கிறது. இவ்விஷயங்களை மேலும் ஆராயவேணடும.

இந்நூலில சுப்பிரமணியக் கடவுளின் அவதார நோக்கமும். அப்பெருமானெடுதத திருவுருவததின விளக்கமும், கந்தபுராணத்துக்குப் பொருள் சொல்வோர் அவதானிக்கவேண்டியனவும் சுருக்கமாகவும தெளிவாகவும் கூறப்பட்டுள்ளன.

இந்நூலைப் படித்தவுடன் இதை மறுபடியும வெளியிட்டுப் பயன்படுததவேணடுமென்று விரும்பினேன். அவ்விருப்பத்தை நிறைவேற்ற ஒரு சந்தர்ப்பமும் இடைத்தது. சமீபத்தில் இறைனடி சேர்ந்த தபாற் கந்தோர் தலைவர் திரு. சரவணமுத்து அவர்களின்பிள்ளைகள் தமது தகப்பனார் ஞாபகார்த்தமாக ஒரு சிறு பிரசுரம் வெளியிடவேண்டுமென விரும்பினர். அவர்களுக்கு சுப்பிரமணிய பிரபாவம என்னும் நூலை வெளியிடலாமெனக கூறினேன். அவர்களும் அக்கருத்தைத் உவந்தேற்றுக்கொண்டதின் பேரில், இப்பொழுது இப்பதிப்பு வெளிவருகிறது. சைவ மக்கள் இதனைப் படித்துப் பயனடைவார்களாக.

மறைந்தவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

# திருவள்ளுவ நாயனர் குருபூசை

திருவருளை முன்னிட்டுத் திருவள்ளுவநாயனர் குருபூசை 1-3-72 புதன்கிழமை யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை யாதரவில் சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

## காலை நிகழ்ச்சிகள் :

மு. ப. 9-00 — பி. ப. 1 மணி 1. சிவபூஜா மண்டபத்தில் சிவபூஜை.
2. நாவலர் மண்டபத்தில் நடராஜர் பூஜை.
3. திருவள்ளுவ மாலையோதல். 4. மாகேசுர பூஜை.

## மாலை நிகழ்ச்சிகள் :

பி. ப. 5-30 மணி

விரிவுரைக் கூட்டம் ஆரம்பம்

தலைவர் : சபைத் தலைவர் திரு. த. சோமசுந்தரம் அவர்கள்

1. தேவாரம்
2. தலைவர் முன்னுரை
3. மாணவ மாணவிகள் பேச்சு
   - i. செல்வி எ. சகுந்தலா —யாழ். இந்து மகளிர் கல்லூரி
   - ii. செல்வி வே. தமிழரசி —யாழ். இந்து மகளிர் கல்லூரி
   - iii. செல்வன் வ. கி. சிவபாலன் —யாழ். இந்துக் கல்லூரி
   - iv. செல்வன் ந. விக்கினேஸ்வரன் யாழ். இந்துக் கல்லூரி
4. "வள்ளுவரும் சமயமும்" — வித்துவான் க. சொக்கலிங்கம் B. A.
5. "குறளும் சைவசமய நூல்களும்" — சைவப்பெரியார் திரு. மு. சதாசிவம்
6. "வள்ளுவரும் மெய்யுணர்தலும்" — திரு. நா. செல்லப்பா அவர்கள் (போதனாசிரியர்)
7. நன்றி கூறுதல்.
8. தேவாரம்.

சைவாபிமானிகள் யாவரும் சமூகமளிப்பார்களாக.

வை. இரகுநாதமுதலியார் காரியதரிசி — மு. மயில்வாகனம் சமயப் பிரசார அமைச்சர்

சைவ பரிபாலன சபை, யாழ்ப்பாணம்

24-2-72

# சிவஞானமும் பாசப்பொருளும்

அநாதியாகவே பாசப்பொருள்களாற் பீடிக்கப்பட்ட ஆன்மாவுக்குத் திருவருள் இருநிலைகளில் நின்று உதவுகிறது. ஒன்று மாயையுடன் கலந்த திரோதான சக்தி நிலை. மற்றது மாயையுடன் கலவாத சுத்த சக்தி நிலை. திரோதான சக்தியின் அருளால் ஆன்மா சுட்டறிவைப் பெறுகிறது. சுத்த சக்தியின் அருளால் வியாபக அறிவு விளங்கப்பெற்றுச் சிவனைக் காண்கிறது.

சுட்டறிவு கட்டுப்பட்டது. நாம இதைக் கொண்டு உலக விவகாரங்களை ஓரளவு அறிந்து வாழ்கிறோம். இது இருட்டறையில் உள்ள சிறு விளக்குப் போன்றது. ஆணவமலம் இருட்டுப் போன்றது. ஆனல் இருளினும் கொடியது. தான் இருப்பதாகவே காட்டிக்கொள்ளாது. ஆன்மாவினுடைய அறியும் திறனை அணு அணுவாகச் சிதற அடிக்கிறது. இத்தகைய கொடிய ஆணவத்தை உணர்ந்து கொள்வதற்கும், அசனியாறும் சொற்பம் நீங்கி, திருவருளின் கலப்பு நிலையை மட்டும் உணர்வதற்கும் உதவும் சிறு விளக்கே சுட்டறிவாகும். இதனல் ஆன்மாவை வியாபக அறிவுபெற்று சிவஞான ஒளியயமாக்க இயலாது.

சூரிய ஒளியைத் தடைசெய்யும் கருமேகங்கள் நீங்கினல் சூரியஒளி தானகவே வருகிறது. மல நீராகம் உண்டாகும்போது சிவஞானம் தானகவே வருகிறது. இந்த மல நிராகம், சுத்தசக்தியானது "தம் முதற்குருவுமாய்த் தவத்தினில் உணர்த்த" வெறபடுவது. வேதங்களை விரிவாகக் கற்று வேதாந்தப் பட்டம் மட்டும் பெற்ற ஒருவரால் சிவஞானத்தை உணர்த்த இயலாது என்பது சைவசித்தாந்தம். ஒன்றில் சிவபெருமானை நேரில் உணர்த்துதல் வேண்டும். இன்றேல் சிவஞானத்தைப் பூரணமாகப் பெற்றுச் சிவமயமாகவே விளங்கும் சீவன் முத்தர் மூலம் உணர்தல் வேண்டும்.

சுட்டறிவினல் வியாபக அறிவை உணர்த்த இயலாது வியாபக அறிவு பூரணமானது சுட்டறிவு அதனை ஒரு சிறு பகுதியாகும். ஒரு சிறுபகுதியால் பூரணத்தை விளக்க இயலாது. பூரணமே பூரணத்துக்குச் சமானமாகும் தனக்கு உவமை இல்லாதவன் சிவன். சிவஞானமும் தனக்கு உவமை இல்லாததே.

சிவஞானம் பெற்ற ஜீவன் முக்தர்கள் சிவனை வியாபகமாக எங்கும் கண்டார்கள் பாசஞானமோ, அல்லது பாசப் பொருளோ அவர்களுக்குச் சிவஞானத்தைக் காட்டிற்று என்பது விபரீதமாகும். பாசப் பொருளுக்கு அறிவிருந்தாலன்றோ சிவத்தைக் காட்ட முடியும்? அவர்கள் சிவத்தைக் கண்டது தூலக்காட்சியில் அல்ல; மானதக் காட்சியில் அல்ல; ஆன்மீகக் காட்சியில் அல்ல; யோகக் காட்சியாகிய சிவக்காட்சியே அவர்களுக்கு வியாபக வடிவில — கல்லில் மண்ணில, பெண்ணில், பொன்னில் சிவனைக் காட்டியது. தூலக்காட்சியால் பூரணமான பரம்பொருளைக் காட்டலாம் என வாதிடுவது விதண்டவாதமேயன்றி வேறில்லை.

சிவவடி பற்றிப் பணிந்து நிற்கும்.

நா. செல்லப்பா

14, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். 24-2-72

# திருஞானசம்பந்தர் திருவாலவாய்.........

1-ஆம் பக்கத்தின் வளர்ச்சி

வியமங்கையர்க்கரசியாரும், சோணிபுரப் பெருமான் அருள்கொண்ட சிவஞானச் சோதியை ஆலவாயான் அருள்கொண்டு வரவேற்று நிற்கக்கண்ட அருமறையாளரும் ஒதுங்கி நின்று உள்ளமுருகும் மங்கையர்க்கரசியார் எவரென மந்திரியார் வழிகாட்ட மகிழ்வுகொண்டு அவரை யணுகவும் செய்தவத்தின் பெரும்பயனே திரண்டுவந்தது எனக்கொண்டு மறையாளரின் பாதங்களில் வீழ்ந்து வணங்கினர். மங்கையர்க்கரசியாரும் அருள் வெள்ளத்தில் திளைத்து அடிபணிந்த அம்மையாரை தம் திருக்கரத்தால் எடுத்தருளினர் சிவஞான வள்ளலார்.

தன் கண்களிலிருந்து அருள் மழை பொழியவும் ஆலவாயான் அருட்டிறனை உன்னி உள்ளமுருகவும் குன்றிலாடும் குமரன் போன்ற ஞானவள்ளலாம் ஞானசம்பந்தரைப் பணிந்து நின்றார். கோலமயில் போன்ற கோப்பெருந்தேவியார் யானும், என்பதிநாவும், எம் நாடும் செய்த தவப் பயனே தாங்கள் இப்பகுதிக்கு எழுந்தருளியது' என வேண்டிக் கூறி நின்ற மங்கையர்க்கரசியைக் கண்ட ஞானசம்பந்தர் சோழகுலக்கொடியே! சிவநெறியே சிந்தை கொண்டு அசம்பனைசசெல்வியாக வாழும் உம்மைக் காணவே திருவருள் பாலிக்க இங்கு வந்தேன் என்று திருவாய் மலர்ந்தார். இதைக்கேட்ட அம்மையார் முகமலர்ந்து பணிந்து நின்றார் மங்கையர்க்கரசியாருக்கு விடைகொடுத்தனுப்பி விட்டு குலச்சிறையாருடன் ஆலவாயில் அமர்ந்தானையும் ஆடியபாதனை பாடிப்பணியச் சென்றார் பரமனைப் பாடிப் பணிந்தபின் அன்னைகருளின அழகியதிருமடத்தில அடியார்கள் புடைசூழ அழைத்துச் செல்லப்பட்டு, அடியார்களுடன் அங்கமர்ந்தருளினர். மங்கையர்க்கரசியாரின் ஏவலால் மந்திரியார் அடியார்களுக்கும், அம்பிகைபாகன் அருள் பெற்றார்க்கும், நலவிருந்தளித்து மகிழ்ந்திருந்தார்

அம்மடத்தில் அமர்ந்திருந்த ஞானவள்ளலின் நிலையைக்கண்டு அழுக்காறு பெருக்கெடுத்த அமணர்குழாம் அரசனை அணுகி, வேந்தே! "சோழநாட்டிலிருந்து சுடலையாடியின் அருள்பெற்ற அந்தணச் சிறுவன சாம்பல் பூசிய அடியார் குழாத்துடன் எங்கள் கொள்கையைக் குலைக்கவும், வாதில் வெல்லவும் வந்திருக்கிறன்' என்று மனப்பீதியுடன் கூறினார்கள். கோவேந்தன் கோபங்கொண்டு அப்படியானல் யாம் என்ன செய்ய வேண்டும் என்று ஆறுமாப்புடன் கேட்டான். அரசன் நிலையைக்கண்ட அமணர்கள் "அந்தப் பாப்பனச் சிறுவனை எங்கள் மந்திரத்தால அவன் தங்கியிருக்கும் மடத்துக்குத் தீ மூட்டி அவனை இங்கிருந்து அப்புறப்படுத்துவோம்" என்றார்கள். உடனே செய்யுங்கள் என அரசன் ஆணையிட்டு, சமணர்களை அனுப்பி விட்டு அந்தப்புரம் போந்தான்.

அரசன் அந்தப்புரம் சென்ருன் என அறிந்த மங்கையர்க்கரசியார் அரசனை அணுகினர். தன் உயிர்க்குயிரான கணவன் மகிழ்வின்றி வாடிய முகத்துடன் இருப்பதைக் கண்டதும், மனம் வருந்தி மன வாட்டத்துக்குக் காரணம் என்ன என தனது பத்தாவை பரிவுடன் வினவினர்.

அதற்கு அரசன் "அன்பே! சீர்காழிச் சிறுவன் ஒருவன் பல அடியாருடன் சங்கரன் அருளால பல அற்புதங்கள் செய்தும நமது குலகுருமாராகிய சமணர்களை வாதில் வெல்ல இங்கு வந்திருப்பதை கண்டு அடிகளார்துன் பமுற்றனர். யானும் அதுகேட்டு மனவேதனையடைந்தேன். இதுவே என்வாட்டத்துக்குக் காரணம்" என்று கூறி முடித்தான். இதைச் செவிமடுத்த மங்கையர்க்கரசியாரும் பரமனருள்பெற்ற பாலன் வாதில வெல்ல இங்கு வந்தான் என்று கேட்டதும் இன்பமடைந்தார், கொல்லாமையையும பொய்யாமை கூறுவதையும் அறமெனச் சொல்லி கொடுந்தொழில் புரியும சமணர்கள் பாலனுக்கு என்ன தீங்கு செய்வார்களோ! என்று எண்ணும்பொழுது துன்பமும் கொண்டாள். என்றாலும், தனது மனநிலையை அரசன் உணராதவாறு ஒருவாறு திடங்கொண்டு அரசே! தாங்கள் கூறியபடி இரு சமயவாதிகளும வாதில் கலந்து வென்றவர் பக்கம் சேருதலே உயிர்க்கு உறுதிபாகும். மன்னனின் நீதியும அப்படியானதே அதில் என்ன பிழை கண்டோம்? உண்மை எது எனக் கண்டபின அதன் வழி நிற்றல் தானே நீதியும தருமமுமாகும்". என்று உரைத்தனர். அதற்கு அரசன் மவுனமாக எழுந்து சென்றான். அப்பொழுது சிவச்செல்வர் குலச்சிறையார் அம்மையாரிடம் வந்து' ஞானவள்ளலைக் கண்டோம், ஞான ஒளி பிரகாசிக்கக் கண்டோம, ஆனல் சமணர்கள் என்ன வஞ்சனைகளைச் செய்து பாலனுக்குத் தீங்கிழைப்பார்களோ அறியேம சமணர்களின் சிறுமையால் பாலனுக்கு தீங்கு விளையுமாயின் யாம உயிர் விடு

வளர்ச்சி 2-ம் பக்கம்

## நாயன்மாகட்டில் வள்ளுவர் தினம்

யாழ். நாயன்மார்கட்டு ஸ்ரீ இராசராசேஸ்வரி அம்பாள் கோவிலில் திருவள்ளுவர் விழா 1-3-72 இல் கொண்டாடப்பெறும். நல்லூர் மொழிவழி நிலையத் தலைமை அலுவலர் திரு. E. R. முத்தையா அவர்கள் திருவள்ளுவர் படத்துக்கு மாலை சூட்டி வைத்து, சொற்பொழிவு நிகழ்த்துவார். மேற்படி வட்டார யாழ்நகர சபை உறுப்பினர் திரு K. S. நடராசா அவர்கள், திரு. இ. சரவணமுத்து அவர்கள் உட்பட பலர் கருத்துரை வழங்குவர் கெமு புத்தூர் ஆசிரியபயிற்சிக்கலாசாலை ஆசிரியமாணவர்கள் 'வள்ளுவர் வழியே நல் வழி' என்னும் பொருளில் வில்லிசை நிகழ்ச்சி நடாத்துவார்கள். (ந.கி)

## திறனய்வுக் கழகம் (ANALYTICAL GUILD)

—0—

வடபகுதி விவசாயம் கைத்தொழிற் றுறைகளில் உற்பத்தியாளர்களை ஊக்குவிக்கவும் தற்கால இளைஞர்களையும் அவற்றில் ஈடுபடுத்தவும் யாழ்ப்பாணம் திறனய்வுக் கழகம் பம்பலப்பிட்டி மாடிவீட்டு பௌத்த சங்க மண்டபத்தில் 4-3-72 பிற்பகல் 4 மணியளவில வடபகுதி உற்பத்திப் பொருட்களின் பொருட்காட்சியொன்றினை நடத்தத் தீர்மானமொன்றைச் செய்திருக்கிறது இளைஞர்களைப் பயனுள்ள முயற்சிகளில்பங்குபெறச்செய்தற்கு இக்கழகம அயரா துழைக்கிறது பொருட்காட்சியைத் தொடர்ந்து சுதேசப்பொருட்களின் மலிவு விற்பனை நிகழும. ந. கி.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்றிக் கோட்டில்

வழ. இல: M B 12000

காலஞ்சென்ற மானிப்பாய் E. S. சாமுவேல் அவர்களின் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டுத் தத்துவவழக்கு இல 2512. T. ல் தத்துவகாரியாகிய மானிப்பாய் சாமுவேல கைடபென் டேயிசி செல்லா திருமைமணி — வழக்காளி

எதிராக

மானிப்பாய் முத்து நாகேந்திரம் — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M B 12000-ம் இலக்க வழக்கில எனக்கு விடுத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டு காணி என்னால 1972-ம் ஞு பங்குனி மீ 20 - திகதி (15-3-72) திங்கட்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத் தொகை :— முதல் வட்டி ரூபா: 1216/-ம் ரூபா: 1000/- க்கு 18-9.70 தொடக்கம் 20-3-1971 வரை 10 வீத வட்டியும் அதன் மேல் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீதமான வட்டியும் கோட்டுச் செலவு ரூபா: 288-80 சதம்

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப்பகுதி மானிப்பாய்க் கோவிற்பற்று மானிப்பாயிறை' மாவத்தைத் தோட்டம்' பா. கி. இல ஒன்று கொழி பதினேழு தசம் இரண்டு ஏழு (பா.கி. இல 1 கொழி 17·27) கிணற்றுப்பாகமும தூர்வை வழி வாய்க்கால இதிலும் எல்லை கிழக்கு தெரு கை வடக்கு நாகமுத்தர் வல்லிபுரத்துக்குரிய ஆதனம். மேற்கு சின்னவி பாலனுக்கும் பெண் சிவகாமனுக்குமுரியவர்தனமும் கணறும் தூர்வை கலமும் தெற்கு கந்தர் சின்னக்குட்டிக்குரியவாதனம். இதடங்கலும்.

யாழ்நகர் வை. ஏரம்பமூர்த்தி
1972-ம் ஞு மாசி மீ 10-ம் திகதி. கொமிசனரும்,
ஏம். 400 25-2-72 விலைமதிப்பாளரும்,

## சிதம்பர தல சுற்று

(1-ம் பக்கத்தின் வளர்ச்சி)

பேரைச் சேர்த்து வைப்போம், நமது ஜென்ம நட்சத்திரத்தில் அத்தகைய காணிக்கையை நாம் கூத்தப் பெருமான் திருவடிக்கு சமர்ப்பிக்கலாம். அன்பர்கள் பலரும் இதில் ஊக்கம் கொண்டால் இத் திருப்பணி பெரிதல்ல ஆகவே இந்த நல்ல செயலில அனைவரும் ஆர்வம் கொண்டு உழைத்தல் வேண்டும் என்றும் தெரிவித்துக் கொண்டார்கள்.

சுற்று மதில் திருப்பணிக் கமிட்டியினர் பிறந்த நாள் வழிபாட்டுத் திட்டம்வகுத்து ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 125/- சந்தா வைத்துள்ளனர், சந்தா தொகை ரூபாய் 125/- இல் ரூபாய் 100/- திருப்பணிக்கு சேர்த்துக் கொண்டு எஞ்சிய ரூபாய் 25/-க்கு ஜென்ம நட்சத்திரத்தன்று ஸ்ரீ சிவகாமசுந்தரி சமேத ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு அர்ச்சனை ஆராதனைகள் நடத்தி ஸ்ரீ நடராஜர் திருவுருவ டாலருடன் பிரசாதங்கள் அனுப்பிவைக்கப்படும்.

வழிபாட்டுத் திட்டத்தில் பங்குபெற விரும்புவோர் ஸ்ரீ நடராஜப் பெருமான் கோயில் சுற்றுமதில் திருப்பணிக் குழு, சிதம்பரம், தென்னிந்தியா. என்ற முகவரிக்குக் கடித தொடர்பு கொள்ளலாம்.

பொது தீக்ஷிதர்கள் பெப்ரவரி 4ஆம் நாள் காலை தருமை ஆதினம 26 ஆவது பட்டம் ஸ்ரீ ல ஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்களை சிறப்பாக வரவேற்று ஸ்ரீ சிவகாமசுந்தரிசமேத ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு சிறப்பாக திருவாபரணங்கள பூராவும் சாற்றும்படி செய்து ஆராதனைகள் செய்து பிரசாதங்கள் வழங்கி, உயர்ந்த பொன்னாடைகள் போர்த்தி, மாலை அணிவித்து தேவ சபைக்கு அழைத்துக் கொண்டு வந்து அமர வைத்துப் பாராட்டுப் பத்திரம் வாசித்துக் கொடுத்தார்கள்.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் தீக்ஷிதர்கள் எல்லோருக்கும் (200 பேர்களுக்கும்) புத்தாடைகள் வழங்கி ரூபா 1001/- (ஆயிரத்தொன்று) அன்பளிப்புச் செய்தார்கள்.

---

## திருஞானசமபந்தர்

[1-ஆம் பக்கத்து வளர்ச்சி]

மேல் கூப்பிய வண்ணம் மங்கையர்க்கரசியும், மாண்புடைய மந்திரியும் வணங்கித் துதிக்கும் பெருமை கொண்ட திருவாலவாயான் வதும் இதுவே என்று,

மங்கையர்க்கரசி வளவர்
கோன்பாவை
வரிவளைக் கைமடமானி
பங்கயச்செல்வி பாண்டிமாதேவி
பணிசெய்துநாடோறும்பரவப்
பொங்கழலுருவன் பூதநாயகன்
நால்வேதமும் பொருள்களும்
அருளி
அங்கயற்கண்ணி
தன்னொடும் அமர்ந்த
ஆலவாய் ஆவதும் இதுவே.

என்று அருள் ஒழுகும்திருப்பதிகங்களைப் பாடிப் பரவினார். அப்பொழுது தன் மணாளனிகள் உத்தரவைப் பெற்று ஆலவாயான் அமரும் கோயில் சூழவந்த மங்கையர் புடைசூழவந்திரு

வளர்ச்சி 3-ம் பக்கம்

---

## Commission Sale
## கோட்டுக்கொமிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழ: இல. 10013

1. காசிநாதர் வேல்முருகன் 2. பெண் காகேஸ்வரி வல்வெட்டி —வழக்காளிகள்

எதிராக

1. சங்கரப்பிள்ளை குமரசண்முகம், 2. கந்தர் கந்தசாமி
3. பெண் ஆச்சிமுத்து 4 தருமலிங்கம் இராசரெட்டினம்
5. பெண் சிவக்கொழுந்து 6. சண்முகம் சின்னத்தம்பி
7. பெண் சிவபாக்கியம் வல்வெட்டி, —எதிராளிகள்

மேற்குறித்த இலக்க வழக்கின் தீர்ந்ததீர்வைப்படியும் குறித்த கோட்டால் எனக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் கீழே விபரிக்கப்படுமாதனத்தை 1972-ஆம் ஆ. ஏப்பிரல் மீ 20-ம் திகதி (20—4—72) வியாழக்கிழமை முற்பகல் 9-00 மணி தொடக்கம் குறித்த ஆதனத்திடமாகவிருந்து என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி உடுப்பிட்டிக் கோவிற்பற்று உடுப்பிட்டிக் குறிச்சியிறை 'பழைய தோட்டம்' வி. பர. 18 இதில் தெற்கரைவாசிக்கு ஆட்சிப்படி வி.பர. 13 இதில் மேற்குப் புறமாக வி. பர. 3 நீக்கி மிகுதி மேற்கு வி. பர. மூன்று (3)க்கு எல்லை கிழக்கு சோமசுந்தரம் பெண் ஆத்தைப்பிள்ளைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் வடக்கு சின்னத்தம்பி மகள் கதிராத்தைக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம் மேற்கு முருகர் வயிரமுத்துக்குரிய ஆதனம் தெற்கு ஒழுங்கை இவ்வெல்லைக்குட்பட்ட நிலம், பனைகள், வடலிகள், கிணறு கொட்டில் கல்வீடு அடங்கலில் சொரியலாய் அரைவாசியும்.

(மதிப்பிட்ட விலை ரூபா 7500/-)

| | |
|---|---|
| தீர்வைத்தொகை: — — | 7205-33 |
| வட்டி ரூபா 4000/க்கு 12% வீதப்படி 10-4-68 தொடக்கம் 26-5-69 வரை | 540-00 |
| வட்டி கூடிய தொகை ரூபா 8045-33க்கு 5 வீதப்படி 27-5-69 தொடக்கம் 4-8-70 வரை | 451-80 |
| மொத்த ரூபாய் | 8 97-13 |
| 6ம், 7ம், எதிராளிகளால் கொடுக்கப்பட்ட தொகை ரூபா | 4098 57 |
| மிகுத்த் தொகை | 4098-56 |
| வட்டி ரூபா 4098 க்கு 5 வீதப்படி 4-8-70 தொடக்கம் 24-10-70 வரை | 42-67 |
| செலவு தொகை | 252-81 |
| 4ம், 5ம், 6ம், எதிராளிகளால் தரவேண்டியதொகை ரூபா | 4394-04 |
| 23-10-70ல் 4ம்,5ம் எதிரிகளால் கொடுக்கப்பட்டதொகை | 2000-00 |
| | 2394-04 |
| வட்டி ரூபா 2394/-க்கு 5 வீதப்படி 23-10-70 தொடக்கம் 5-1-72 வரை | 144-56 |
| | 2538-60 |
| 5-1-72 ல் 4ம், 5ம், எதிரிகளால் கொடுக்கப்பட்டது | 1000-00 |
| | 1538-60 |
| வட்டி ரூபா 1538/-க்கு 5 வீதப்படி 5-1-72 தொடக்கம் 20-4-72 விற்பனவு வரை | 22-40 |
| வரவேண்டிய தொகை | 1561-00 |

சிவலிங்க நிலையம்,
வி ரூ. ரோட்,
பருத்தித்துறை,
18-2-72.

க. நல்லலிங்கம்
கோட்டுக் கொமிஷனரும்.
ஏல விற்பனையாளரும், விலைமதிப்பாளரும்.
M 397 72

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம்டிஸ்திறிக் கோட்டின் தத்துவவழக்கில் T.1820 இலக்கதகால் காலம்சென்ற சின்னையா சிதம்பரப்பிள்ளையின் ஆதனத்துக்கு காரணமானவர் காரைநகர் வேலணையைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை சபாரெட்டினம் தத்துவகாரன். —வழக்காளி

இல M.B. 9318. எதிராக.

யாழ்ப்பாணம் வீட்டு இல: 17, மொகதீன் பள்ளிவாசல் வீதியை சேர்ந்த இருவரும்
(1) மொகமட் அழி மரக்கா மொகமட் சுல்த்தான்
(2) (மனைவி) சறீபா
(3) யாழ்ப்பாணம 1ம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த இருவரும் தபு முததுராசா கைம்பெண் பாகியம்.
(4) முத்துராசா கனகராசா —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் M B 9318-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1972-ம் ஆ. பங்குனி மீ 25-ந் திகதி (25-3-72) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடககம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

திர்வைத்தொகை:— முதல் வட்டி ரூபா 6520/-ம் 9-8-67 தொடக்கம 18-6-1968 வரைக்கும் ரூபாய 5500/-க்கு 10 வீத வட்டியும் அதன் பின் முழுத் தொகைக்கும இறுக்கும் வரை 5 வீத வட்டியும இதில் கொடுக்கப்பட்ட தொகை ரூபா 4250/- கழிவாக,

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக்கும் டிவிசனும் வண்ணார் பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்மேற்கு இறை "ருசவிகுளம் கரையும், கோம்பன் சிறயற் குள வெளியும், சாம்பிச்சி குளத்திடல்" உத்தரவுபெற்ற உலாந்தா J. N. செல்லத்துரை பிளான் 1912ம் ஆண்டு ஆடி மாதம் 1ம் திகதி 4583 ஆம் இலக்கம் கொண்ட படததால் வரையப்பட்டு குறிக்கப்பட்ட நெற்பரப்பு இலாச்சம் 88 ம் குளி 1½ ம் இதில் சொல்லப்பட்ட முழுமையான உள்ளதும் உடையதிலும் கிழக்குப்பக்கமாக பிரிக்கப்பட்ட துண்டுக்காணி நெல்பரப்பு இலாச்சம் 38 இதற்கால் இதற்கு எல்லைகள்:-

கிழக்கு:- சுல்த்தான் அப்துல்காதர் சுல்த்தான் மொகமதீன் னுடைய ஆதனமும் குளமும்.
வடக்கு:- குளமும ரோட்டும்.
மேற்கு:- மேல் குறிக்கப்பட்ட முழுக் காணியிலும் மேற்குப் பக்க எல்லையால் வடக்கில் இருந்து தெற்குப் புறமாக விடப்பட்ட மிகுதிக் காணி 1½ குளி விஸ்தீரணம் உள்ள துண்டுக் காணி.
தெற்கு:- சிவப்பிரகாசப்பிள்ளை சின்னத்தம்பியார் உரிமையாளர்களின் ஆதனம்,

107. பெரியதெரு.
யாழ்ப்பாணம்.
22-2-71

எ. பி. பி. எதிர்மன்னசிங்கம்
கொமிஷனரும்,
விலைமதிப்பாளரும்.
எம். 401 28-2-72

---

## அடைவு நகை ஏல விற்பனவு விளம்பரம்

அரசாங்க உத்தரவுடன் காரை நகர் வலந்தலை வடக்கில் அடைவு பிடிக்கும் திரு. வே. சுப்பிரமணியம் அவர்களின் அடைவு கடையில் 1971 ம் ஆ தை மீ முதலாம் திகதிக்கு முன் அடைவு வைக்கப்பட்டு மீட்கப்படாதிருக்கும் நகைகள் யாவும் என்னால் 1972 ம் ஆ பங்குனி மாதம் 25 ம திகதி சனிக்கிழமை முறபகல் பத்துமணி தொடக்கம ஷை அடைவு கடையில வைத்துப் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும.

வை. ஏரம்பமூர்த்தி
கொம்மிஷனரும்,
விலைமதிப்பாளரும்

காரைநகர், 1972-ம் ஆ மாசி மீ 23-ம் திகதி
எம். 402 25-2-72

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ: இல. M. B. 10067

1. பொன்னையா நமசிவாயமும்
2. பெண் இராசம்மாவும் இருவரும் களபூமி, காரைநகர் — வழக்காளிகள்

எதிராளி

1. சின்னையா வேலுப்பிள்ளையும்
2. பெண் தங்கப்பா இருவரும், வண்ணார்பண்ணை கிழக்கு யாழ்ப்பாணம். —எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 10067-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும ஒரு துண்டுக்காணியை 1972-ம் ஆ பங்குனி மீ 8-ஆம் திகதி (8-3-72) புதன்கிழமை முற்பகல 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:- முதல் வட்டி ரூபா 7075/- 11-6-68 தொடக்கம் 13—11—68 வரைக்கும ரூபா 5,000/-க்கு 12வீத வட்டியும அதற்குப்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 439-05 சதம் (ஏற்பட்ட செலவு ரூபாய் 313-45 வெலியாத்துச் செலவு 67-50 ஏற்படக்கூடிய செலவு 58-10)

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்கிழக்கிறை 'தாண்டிக்குளம் கரை, கந்நாற்றுவான் வயல் வரம்பு கட்டியாகுத்திடலும் மதுபிரிவுகளும்' இதன் நிலப்பரப்பு (0 குலிகள் 05) குளிகள் ஐந்தும் ஒரு கடைக் கட்டிடமும் கிணறும். குசினியும், மலசலகூடமும் எல்லைச் சுவரில் அரைப் பங்கும் குறிப்பிட்ட ஐந்து குளிக்கு எல்லை கிழக்கு வாய்க்கால் (தண்ணீர் ஓடை) வடக்கு முத்துலிங்கத்தின் ஆதனம், மேற்கு கஸ்தூரியார் ரோட்டு, தெற்கு சுப்பிரமணியம் துரைராசாவின் பெண் செல்லம்மாவின் ஆதனம், இடாப்புப் பதிவு D 311/145

வே. கோபாலபிள்ளை
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்
எம் 399 25—2—72

22. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். 26-1-72

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோடு

வழ: இல. M B 8323

இடைக்காடு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
இடைக்காடு, அச்சுவேலி. —வழக்காளி

எதிராக

நாகன் சின்னக்குட்டி, கதிரிப்பாய் அச்சுவேலி. —எதிராளி

யாழ்ப்பாணம் மாவட்டகோட்டின் M B 8323-ஆம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப்படும ஆதனம 1972-ம் ஆண்டு சித்திரை மாதம் 8-ம் திகதி (8-4-72) சனிக்கிழமை காலை 10 மணியளவில் அவ்வாதனத்திற்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால்விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதலும் வட்டியுமாக ரூபா 966/- இன்னும் ரூபா 780-35 சதத்திற்கு 25-5-66 தொடக்கம் 3-7-67 வரைக்கும் நூற்றிற்கு ஐந்து வீத வட்டியுங் கூட்டிக் கூட்டிய தொகைக்கு 3—7—67 தொடக்கம் முழுப்பணம் இறுக்கும் வரைக்கும் ஐந்து வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 245-92 (ஏற்பட்ட செலவு 158-08, இனிமேலேற்படும் செலவு 39-97 வெலியாத்துச்செலவு47-87) இதில் முதலாக கொடுத்த ரூபா 500/-ம செலவாக கொடுத்த 100/- போக மிகுதி

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் வலிகாமம் கிழக்குப் பகுதி அச்சுவேலிக் கோவிற்பற்று கதிரிப்பாயிறை 'கொல்லைவாரிக்கலட்டி' பா. நி. ல. 7ம 15, 5/24 குளிகளும், வீடும், வான்பயிர் செய்பயிர்களும், எல்லை கிழக்கு வெள்ளையன் சித்தனுக்குரியவாதனம வடக்கு கணபதி பொன்னனுக்குரிய வாதனம், மேற்கு கந்தன் சிட்டினனுக்கும் மறுபேருக்குமுரியவாதனம், தெற்கு ஒழுங்கை, இக்காணியின் தெற்கெல்லையிலிருந்து வடக்கே கணபதி பொன்னனுக்கும் செம்பன் வேலனுக்குமுரிய காணிக்குப் போகும் 9 அடிப்பாதை பாவிப்பின் உரிமை பிற நிங்கலாக இவ்வெல்லைக்குட்பட்டவை முழுவதும்.

தா க பொன்னுத்துரை J. P
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்
M 403 24-2-72

"அகிலகம்"
28/1, யாழ்வீதி, யாழ்ப்பாணம். 19-2-72

---

வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நானமறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவிதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில், 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 25—2—1972 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர்: திரு. மு. மயில்வாகனம் அவர்கள்